DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

MCOP. No. 73/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents –RW1

| | | |
|---|---|---|
| Name | : | யமுனா |
| Husband Name | : | குருராஜபிரசாத் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2024.

**முதன்மை விசாரணை :–**

நான் தற்போது இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் அதிகார கடிதத்துடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அதிகார கடிதம் **சா.சா.ஆ.1**. இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகன எண்.TN 65 AK 3943 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் சோதனை அறிக்கை ஆகியவற்றின் உண்மை நகல்களை ஆஜர்படுத்தியுள்ளேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ.2**. சோதனை அறிக்கை **சா.சா.ஆ.3**. மேற்சொன்ன இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டிய ஓட்டுநர் மெக்டோனி த/பெ.தர்மர் என்பவரின் ஓட்டுநர் உரியம் ஆய்வு

சமயத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. அதனால் அந்த வாகனம் எங்கள் அலுவலகத்தால் தடுத்து வைக்கப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

<u>மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை</u>:—

நீதிமன்ற அறிவிப்பில் கேட்கப்பட்ட சீசர் பதிவேடு என்னால் ஆஜர்படுத்தப்படவில்லை என்று சொன்னால் நான் ஆஜர்படுத்தியுள்ள வாகன சோதனை அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் ஆஜர்படுத்தப்படவில்லை என்பதால் சம்மந்தப்பட்ட வாகனம் சிறைபிடிக்கப்பட்டு தேவிப்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் தங்கராஜ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனியாக சீசர் பதிவேடு இல்லை. ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**